# அக்டோபர் – 28 – சனி

### திருத்தூதர்கள் சீமோன் மற்றும் யூதா

### “கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார்” லூக் 6:12

## முதல் வாசகம் : ஏபேசியர் 2 : 19 – 22

சகோதர சகோதரிகளே! எனவே இனி நீங்கள் அன்னியர் அல்ல. வேற்று நாட்டினரும் அல்ல. இறைமக்கள் சமுதாயத்தின் உடன் குடிமக்கள் கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோர்களை அடித்தளமாகவும், கிறிஸ்து இயேசுவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள்.கிறிஸ்துவின் உறவில் கட்டடம் முழுவதும் இசைவாகப் பொருந்தி, ஆண்டவருக்கென்று தூய கோவிலாக வளர்ச்சி பெறுகிறது.நீங்களும் அவரோடு இணைந்து தூய ஆவி வழியாகக் கடவுளின் உறைவிடமாகக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

**பதில்பாடல் :** படைப்புக்களின் அறிக்கை உலகெங்கும் சென்றடைகிறது

## நற்செய்தி : லூக்கா 6 : 12 – 16

அந்நாள்களில் இயேசு வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார். அங்குக் கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார்.விடிந்ததும் அவர் தம் சீடர்களைத் தம்மிடம் கூப்பிட்டு அவர்களுள் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் திருத்தூதர் என்று பெயரிட்டார்.அவர்கள் முறையே பேதுரு என்று அவர் பெயரிட்ட சீமோன், அவருடைய சகோதரர் அந்திரேயா, யாக்கோபு, யோவான் பிலிப்பு, பர்த்தலமேயு,மத்தேயு, தோமா, அல்பேயுவின் மகன் யாக்கோபு, தீவிரவாதி எனப்பட்ட சீமோன்,யாக்கோபின் மகன் யூதா, துரோகியாக மாறிய யூதாசு இஸ்காரியோத்து என்பவர்களே.

**தியானம் :** யேசு நமக்கு செபிக்க கற்றுக்கொடுத்தார். செபம் எமது வாழ்விற்கு இன்றியமையாத ஒன்றாகும். யேசு பல தடவைகளில் இறை வேண்டல் செய்தார். நற்செய்தியில் பார்ப்பதுபோல் பன்னிருவரை தெரிவு செய்யும்போதும், நோயாளர்களை குணமாக்கும் போதும், பாடுபடுவதற்கு முன்பும் செபித்தார். தேவைக்காக மட்டும் நாம் செபிக்க கூடாது. எப்போதும் செபிக்க வேண்டும். இன்பத்திலும் துன்பத்திலும் செபம் இருக்க வேண்டும். வரம் கேட்டு பெற்றவர்களிற்கு செபத்தின் வல்லமை புரியும். அது சாத்தானை வெற்றி கொள்ள பயன்படுத்தப்படும் கிறிஸ்த்தவர்களின் ஆயுதம். நாம் பாதை தவறி செல்கின்றபோது எச்சரிக்கை விடுக்க உதவுகிறது. மனித பலவீனத்தினால் இறைவனைவிட்டு விலகி நிற்கின்ற போது இறைவனையும், எம்மையும் ஒன்றிணைக்கும் ஒற்றுமைப் பாலமாக செயற்படுகிறது. அன்பை, மன்னிப்பை, பொறுமையை, தாழ்ச்சியை சமாதானத்தை நம்மில் வளர்க்கிறது. கடவுளின் கட்டளையை கடைப்பிடிக்கவும், அதன் படி வாழவும் நம்மை தூண்டுகிறது. ஆனால் இன்று நமக்கு செபிக்க நேரமில்லை. சுகபோக வாழ்வை தேடி அலையும் போது, செபம் தேவயற்ற ஒன்றாகவே பார்க்கப் படுகிறது, இந்த எண்ணம் மாற வேண்டும். நாம் மட்டும் செபிக்காமல், நம் இளைய சமுதாயத்திற்கு அதனை கற்றுக்கொடுக்க வேண்டும். அப்போது நமது வாழ்வில் மட்டும் அல்ல அவர்களின் வாழ்விலும் நாம் கடவுளைக் காணலாம்.